# நீதி கட்சி

முதன் முதலில் சமூகநலனில் மிகவும் அக்கரையுடன் செயல்பட்ட முன்னோடி என்று நீதி கட்சியை கூறினால் அது மிகையாகாது.

சென்னை மாகாணச் சமூகத்தில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூறாண்டின் முற்பகுதியிலும் பிராமணர் மற்றும் பிராமணரல்லாதோருக்கிடையே வகுப்புவாரியாகப் பிரிவினை ஏற்பட்டிருந்தது. பிராமணர்கள், மொத்த மக்கள் தொகையில் தங்கள் சதவிகிதத்தை விட மிக அதிக அளவில் அரசு பணிகளில் இடம் பெற்றிருந்ததும், பிற சாதியினரை அவர்கள் நடத்திய விதமும் இப்பிரிவினைக்கு முக்கிய காரணங்கள். 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிராமணரல்லாதோருக்காக ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க நீதிக்கட்சி, *தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்* என்ற அரசியல் கட்சியை 1916 ஆம் ஆண்டு துவக்கியது. (குறிப்பு-முதலில் டாக்டர் நடேச முதலியார், சர். பி.டி. தியாகராஜ செட்டியார், டி.எம். நாயர், தாயரம்மாள், மேலும் அலமேலு மங்கை – இவர்கள் எல்லாம் இணைந்து *தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்* (*South Indian Liberal Federation*, சவுத் இந்தியன் லிபரல் பெடரேசன்) என்ற இயக்கத்தை உருவாக்கி னர்; பிறகு இதுவே நீதிகட்சியாக உருவாகியது.)

நீதி கட்சி கி.பி. 1916 நவம்பர் 20ம் நாள், சென்னையில் டாக்டர் நடேச முதலியார், சர். பி.டி. தியாகராஜா செட்டியார், டி.எம். நாயர், அவர்களால் தொடங்கப்பட்டது. சுமார் 17 வருடங்கள் நீதிகட்சி தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி நடத்தியது. சுதிந்திர இந்தியாவில் தமிழத்தில் இப்பொழுது நடைமுறையில் உள்ள நல்லதிட்டங்கள் எல்லாம் சுமார் 80–90 ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தப்பட்டன. அவர்கள் கொண்டு வந்த மக்கள் நல்வாழ்வு திட்டங்களை வியக்கதக்கவைகளாக உள்ளன. நீதிகட்சியின் சில சமூகநலப்பணிகள் இங்கேகூறபட்டுள்ளன. மேலும சுதந்திர இந்தியாவில், தமிழகத்தில் அமைந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, இன்றுவரை மாநில அரசும் நீதிகட்சியின் சமூகநலன்களை செயல்படுத்துகின்றன.

தங்கள் ஊடகமாக 'நீதி ஜஸ்டிஸ்' என்ற பத்திரிக்கை துவங்கினார்கள். நீதிகட்சி சுமார் 13 வருடங்கள் ஆட்சியில் இருந்தன. சென்னையில் இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்று கட்சியாக செயல்பட்டது. மற்றும் 1937 டிசம்பரில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டது. 1937ல் ஆட்சியிழந்தபிறகு அவர்களால் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. பிறகு 1944ல் திரு. ஈ.வே.ரா பெரியார் அவர்கள் நீதிகட்சி என்று இருந்ததை திராவிடர் கழகமாக மாற்றினார்கள்.

*Ref. https://ta.wikipedia.org/wiki/நீதிக்_கட்சி*

**நூற்றாண்டுகளை கடந்த நீதிகட்சியின் சமூகநலபணிகள்**

1. பெண்கள் முதன் முதலில் தேர்தலில் போட்டியிட ஊக்குவித்தது. அதன்படி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் முதன் பெண் MLA- ஆக தேர்வு செய்யப்பட்டார்.

2. பெண்களுக்கு ஒட்டுரிமை பெற்று கொடுத்தல்

3. தேவதாசி (அதாவது பொட்டு கட்டுதல்) முறையை ஒழிக்க முனைப்புடன் செயல்பட்டது

4. சுமார் 5 முதல் 12 வயது இளம் சிறார்களுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வியை கொண்டு வந்தது. மற்றும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

5. மலபார் (அ) கேரளம் மீனவர்களுக்கு பள்ளிகள் நிறுவியது

6. மாணவிகளுக்கு 8–ம் வகுப்புக்கு மேல் இலவச கல்வி

7. விவசாயிகளுக்கு கடன் வசதி ஏற்பாடு செய்தல்

8. சமஸ்கிருதம் அறிந்திருந்தால் மட்டுமே மருத்துவ கல்வி பயில முடியும் என்றிருந்த நிலையை உடைத்தெறிந்தது

9. கோயில் சொத்துநீகள் மற்றும் வருவாயை பொது உடமை ஆக்கியது

10. தீண்டப்படாதவர்கள் என்றிருந்தவர்களை ஆதி திராவிடர்கள் என்று அரசாணை பிறப்பித்தது

11. 1921ல் ஜாதிவிகிதாச்சார முறையில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க அரசானைகள் வெளியிடப்பட்டது.

12. மாணவர்களுக்கு காலை இலவச சிற்றுண்டி வழங்கியது

13. பல பள்ளிக் கட்டிங்கள் கட்டி தந்தது

14. பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியது

15. அண்ணாமலை மற்றும் ஆந்திர பல்கலைகழகங்கள் நிறுவப்பட்டன.

1967 இலிருந்து தமிழ் நாட்டை ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் திமுக மற்றும் அதிமுக ஆகியவற்றுக்கு நீதிகட்சியும் திராவிடர் கழகமும் கொள்கை மற்றும் அரசியல் ரீதியான முன்னோடிகளாகக் கருதப்படுகின்றன.